மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆவணித்திங்கள் 13 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 476/2022 -ல்**

**அசல் வழக்கு எண். 119/2021**

1. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், நெ.1/140, அழகி தெருவில் வசிக்கும் சோமு குமாரர், இந்து, 56 வயதுள்ள அஞ்சப்பன்.
2. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், நெ.1/140, அழகி தெருவில் வசிக்கும் அஞ்சப்பன் மனைவி, இந்து, 50 வயதுள்ள மலர்.
3. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், நெ.1/140, அழகி தெருவில் வசிக்கும் அஞ்சப்பன் குமாரர்,இந்து, 48 வயதுள்ள செல்வநாயகம்.
4. மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், நெ.1/140, அழகி தெருவில் வசிக்கும் செல்வநாயகம் மனைவி, இந்து, 45 வயதுள்ள லதா.

...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// **எதிர்**//

மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், நெ.1/140, அழகி தெருவில் வசிக்கும் வடிவேல் குமாரர், இந்து, 48 வயதுள்ள நாகேஸ்வரன் .

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 18.08.2022 தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 05.09.2022,23.09.2022, 17.11.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 24.11.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 14.07.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ. 1000/-ஐ எதிர்வரும் 12.09.2023 ம் தேதிக்குள் செலுத்தி வைக்கவேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 13.09.2023

2023 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)